# தொலைக்காட்சிப் பாவனையும் வாழ்க்கைச்செலவும். (தலைமன்னார் பியர் சிறப்பு பார்வை)

ஆர்.திவ்யா மற்றும் செ.சந்திரசேகரம்

பொருளியல்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

இந்த ஆய்வானது ‘‘தொலைக்காட்சி பாவனையும் வாழ்க்கைச்செலவும்’’ என்ற தலைப்பில் தலைமன்னார் பியர் கிராமத்தினை சிறப்பாக மையப்படுத்தி இடம்பெற்ற ஒரு ஆய்வாகும். இவ்வாய்வின் நோக்கமாக இந்த ஆய்வு பிரதேசத்தில் உள்ள மக்களின் அளவுக்கதிகமான தொலைக்காட்சி பாவனை அவர்களது வாழ்க்கைச்செலவை அதிகரித்துள்ளதா? அத்தோடு பெண்களின் உற்பத்தி நடவடிக்கைகளை பாதிக்கின்றதா? என்பதனையும் இனங்கண்டு அதற்கான தீர்வுகளையும் பரிந்துரைகளையும் முன்வைப்பதாக இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்விற்காக படையாக்கப்பட்ட மாதிரி எடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களிடம் வினாக்கொத்து வழங்கி அவர்களது வருமானம் அவர்கள் தொலைக்காட்சி பார்க்கின்ற நேரம் அவர்களது மின்சாரக்கட்டணம் மாதாந்த தொலைக்காட்சி கட்டணம் என்பனவற்றை முதலாம் நிலைத்தரவுகளாக பெற்று அத்தோடு அப்பிரதேச மக்களோடு கலந்துரையாடல் நேரடி அவதானிப்பு விடயஆய்வு நேர்காணல் என்பன மூலமாக தரவுகள் பெறப்பட்டன. இவ்வாறாக பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்விற்காக கணிதவியல் நுட்பம், சமூகவிஞ்ஞான புள்ளிவிபரவியல் சாதாரண புள்ளிவிபரவியல் நுட்பம் முறைகள் பயன்படுத்தப்பட்டு அதனடிப்படையில் தரவுகள் தொகுக்கப்பட்டு விபரணப்புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறையினூடாக முடிவுகள் பெறப்பட்டன. இவ்வாறான நுட்பங்கள் ஊடாக தலைமன்னார் பியர் மக்கள் தொலைக்காட்சிக்காக செலவிடுகின்ற மனித மணித்தியாளங்களையும் அதனூடான வாழ்க்கைச்செலவு அதிகரிப்பினையும் இனங்கண்டு இவ்வாறாக வீணாக்குகின்ற இந்த நேரத்தினை ஏதேனும் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதன் மூலம் தலைமன்னார் பியர் பிரதேசத்தில் நிலைத்துநிற்கும் அபிவிருத்திக்கு ஏற்படுத்த முடியும் என்ற பரிந்துரைகனை வழங்கும் வண்ணம் இவ்வாய்வு அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** வாழ்க்கைச்செலவு, உற்பத்தி